கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

கோடைகால இதழ்
NEWS BULLETIN
SUMMER 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
06/09/2025	2025-2026 புதிய கல்வியாண்டுக்காக தமிழ்ப் பாடசாலை ஆரம்பம்
20/09/2025	12.00pm பெற்றோர் கலந்துரையாடல்

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith Piries)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Vocal (Carnatic) (Mr. Dheenadayalan Pathmanathan)	12.30pm – 2.30pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	1.00pm – 5.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri Kirish)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri Jeyaseelan)	11.00am – 3.00pm
Vocal (Carnatic) (Mrs. Vanathy Sureskumar)	9.00am – 1.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	11.30am –12.30pm
Miruthangam (Mr.Wijayarajah Mayilvaganam)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani Saravanathasan)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Tamil	11.30am –12.30pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar Devaraj)	10.00am –12.00am
Free 11plus Maths (Mr.Krish)	9.00am – 11.00am





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டு விழா

இந்த வருடத்துக்கான கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழா 13/07/2025 அன்று Lyng Hall பாடசாலை மைதானத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. சேரன், சோழன், பாண்டியன் என இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றமை எல்லோருக்கும் உற்சாகத்தை அளித்தது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக DEPUTY LORD MAYOR CLLR ROGER BAILEY COUNCILLOR FOR CHEYLESMORE அவர்கள் கலந்து கொண்டு பிரித்தானிய தேசியக் கொடியை ஏற்றி வைத்ததோடு, வாழ்த்துரையையும் வழங்கினார். தமிழீழ தேசியக் கொடியினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டு இணைப்பாளர் திருமதி விஜிதா இரவீந்திரன் அவர்கள் ஏற்றிவைத்ததோடு, வரவேற்புரையையும் வழங்கினார். கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் கொடியினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு கந்தையா அரியரத்தினம் அவர்கள் ஏற்றி வைத்ததோடு, தலைமை உரையினையும் வழங்கினார்.











சிறப்பு விருந்தினராக, கொவன்றீஸ்வரம் ஆதீன குருமுதல்வர் சிவஸ்ரீ சௌபாக்கிய சசிக்குமாரக் குருக்கள் (ரூபன் ஐயா) அவர்கள் கலந்துகொண்டு, இல்ல அலங்காரத்துக்கான மதிப்பீடுகளை வழங்கியதோடு, வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

யோகேஷியார் தமிழ்ப் பொதுப் பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி சாரங்கா கிருஷ்ணராசா மற்றும் தமிழ்ப்பாட ஆசிரியர்கள் நடுவர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு, வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழக மாணவர்களின் அணிவகுப்பினைத் தொடர்ந்து, ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.









இல்லங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு, மாணவர்களுக்கு இடையில் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.









பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்களுக்கிடையான விளையாட்டு நிகழ்வுகளாக, கயிறு இழுத்தல், ஓட்டம், வேகநடை போன்றனவும் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றன.



விநோத உடைப் போட்டியிலும் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, நடுவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மிகச் சாதுரியமாகப் பதிலளித்தார்கள்.





வெற்றிபெற்ற மாணவர்களின் புள்ளிகளின் அடிப்படையில், மூன்றாம் இடத்தை சோழன்(பச்சை) இல்லமும், இரண்டாம் இடத்தை பாண்டியன்(நீலம்) இல்லமும், முதலாம் இடத்தை சேரன்(சிவப்பு) இல்லமும் பெற்றுக்கொண்டன.

மேலும் புடவைக் கடைகள், பழக்கடை, மணிக்கடை, ஐஸ்கிரீம் வான், உணவகம் என ஊரின் வாசனையைத் தந்து, விளையாட்டு விழாவைக் களைகட்ட வைத்தன.



இந்த விளையாட்டு விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறப் பல நல்ல உள்ளங்கள் அனுசரணை வழங்கியிருந்தனர். பலர் அர்ப்பணிப்போடு செயற்பட்டிருந்தனர். விளையாட்டு விழாவில் கலந்துகொண்டோர், வெற்றிபெற்றோர் என அனைவருக்குமே கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் மனமார்ந்த நன்றிகள்.

கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

WORLD PEACE AND HARMONY இனால் ஒவ்வொரு வியாழனும் இரவு 8 மணிக்கு இணைய வழியில் (ZOOM) நடாத்தப்படும் கதம்பம் நிகழ்வில், 17/07/2025 அன்று எமது பாடசாலையின் சார்பில் செல்வன் தரணிஸ் ஜெயந்தன், செல்வி ஜானுயா அகிலன், செல்வன் கவிசன் மயூரன் ஆகியோர் பாடல்களையும், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.





ஈழத்துப் புலமைகள் பாகம் 30

கடந்த இதழிலே யாழ்ப்பாணம் சங்குவேலி என்னுமிடத்தில் முத்துகுமாரபிள்ளை என்பவரின் மகனாகப் பிறந்த சிதம்பரப்பிள்ளை எனப்படும் உவிலியம் நேவின்ஸ் என்ற தமிழறிஞரைப் பற்றிப் பார்த்திருந்தோம்.

இவ்விதழிலே, அம்பலவாண பண்டிதர் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

கோப்பாயைச் சேர்ந்த அருளம்பல முதலியாருக்கு மகனாக பிறந்தவர். இருபாலை சேனாதிராய முதலியாரிடம் கற்றுத்தேர்ந்தவர். பாரதம், இராமாயணம், இரகுவம்சம் போன்ற பெருங்காப்பியங்களில் பயிற்சி பெற்றவர். கோவையந்தாதி மீது பற்றுக் கொண்டவர். இருபாலை சேனாதிராய முதலியார் பாடிய நல்லைவெண்பா, நீராவிக் கலிவெண்பா எனும் பாயிரங்களைப் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டவர். இவர் மீதுகொண்ட மரியாதையின் நிமித்தம் சிறுப்பிட்டியூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சரம கவிகள் எனும் நூலை யாத்துள்ளார். அவற்றில் ஒரு வெண்பாவைக் காண்போம்.

"தெல்லி நகரந்திரு விழந்ததோ தமிழ்மா
தில்லந்தனையின் ரிகழ்ந்தனளோ-சொல்லரிய
வித்தார வாய்மை விறலம்பல வாணன்
செத்தானென்றாரோ சிலர்"

(மீதி அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
திரு. மாணிக்கம் தவத்துரை ஆசிரியர்.